Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 14½ ஆம் நாள் துல்கஃதா 12 (27-3-64) வெள்ளிக்கிழமை இதழ் 46

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

	வாரப்பதிப்பு உட்பட	வாரப்பதிப்பு மட்டும்
1 வருடம்	48-00	1 -00
6 மாதம்	25-00	6-50
3 மாதம்	13-00	3-25

சிறுபான்மையினர் பிரச்னை

இந்தியாவுடன் பேச்சு: அயூப்கான் இணக்கம்

இருநாட்டு உள்துறைமந்திரிகளும் புதுடில்லியில் சந்திப்பர்

நேருவின் கடிதத்தை பாகிஸ்தான் அதிபர் ஏற்றுக்கொண்டார்

ராவல்பிண்டி, மார்ச் 26

சிறுபான்மையினர் பிரச்னை குறித்து, இந்தியாவுடன் பேச்சுகள் நடத்த பாகிஸ்தான் அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கான் இணக்கம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மையினர் பிரச்னை குறித்தும் சமீபகாலத்தில் நிகழ்ந்த இந்து - முஸ்லிம் இனக்கலவரங்கள் பற்றியும், இந்திய-பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரிகள் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுகள் நடத்துவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரு கடிதம்

கிழக்கு பாகிஸ்தானில் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகள் குறித்தும், இதன் விளைவாக நிகழ்ந்துள்ள இனக்கலவரங்கள் பற்றியும் இந்திய-பாகிஸ்தான் அரசாங்கங்கள் பேச்சுகள் நடத்தவேண்டுமென்று கோரி இந்தியப் பிரதமர் நேரு பாகிஸ்தான் அதிபர் அயூப் கானுக்கு சில தினங்களுக்கு முன்னர் கடிதம் எழுதியிருந்தார்.

அயூப் பதில்

சிறுபான்மையினர் பிரச்னை குறித்தும், இனக்கலவரங்கள் பற்றியும் பேச்சுகள் நடத்தத் தமது அரசாங்கம் தயாராக இருக்கிறதென்று பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் இன்று அறிவித்துள்ளார். இந்தியாவின் யோசனையை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இரு நாடுகளின் உள்நாட்டு மந்திரிகளும் சந்தித்துப் பேச்சுகள் நடத்தலாம் என்றும் அதிபர் அயூப்கான் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாகப் பிரதமர் நேருவுக்கு அதிபர் அயூப்கான் இன்று கடிதமொன்று அனுப்பியுள்ளார்.

நேருவின் வானொலி பேச்சு

இந்தியப் பிரதமர் நேரு இன்று மாலை இந்திய வானொலியில் உரை நிகழ்த்துகையில்; கிழக்குப் பாகிஸ்தானில் சிறுபான்மையினர் சமூகத்தினரு

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

ஏற்புவலி மரணம் அதிகரிப்பு

சுகாதார அதிகாரிகளுக்கு மரணவிசாரணை அதிகாரி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் ஏற்புவலியினால் ஏற்படும் மரணம் அதிகரித்துவருகிறது என்றும் இந்த ஆபத்தான நிலையைத் தடுப்பதற்கு சுகாதார அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் யாழ்ப்பாணம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சமீப காலத்தில் ஏற்பு வலியினால் ஏற்பட்ட மரணங்கள் குறித்து, விசாரணை நடத்திய திரு. எஸ். கனகரத்தினம் இது சம்பந்தமான தமது அறிக்கையொன்றில் கூறியிருப்பதாவது:-

"ஒவ்வொரு மாதமும் இங்கு ஏற்பு வலியினால் ஏற்படும் மரணம் திகைப்பளிக்கக் கூடியதாய் இருக்கிறது. மாதம் இவ்வாறு சுமார் 16 மரணங்கள் ஏற்படுகின்றன. இலங்கையிலேயே யாழ்ப்பாண மாவட்டம் தான் இத்தகைய மரண விகிதத்தில் முன்னணி வகிக்கிறது. ஒரு மன்வெட்டியினால் ஏற்பட்ட சிறு காயம் ஒரு மாதத்திற்குப் பின் மரணத்தை விளைவித்திருக்கிறது. இந்த மாவட்டத்தில் ஏற்புவலியின் தீமை சரியாக உணரப்படவில்லை.

நாள்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதும், ஆஸ்பத்திரிகளில் இதற்கான சிகிச்சை வசதிகள் போதாமையாய் இருப்பதும் மரணத்திற்குச் சில காரணங்களாய் விளங்குகின்றன.

ஏற்புவலி விஷயம் ஆஸ்பத்திரியில் விசேஷமாகக் கவனிக்கப்பட வேண்டும். நிசப்தமான இருட்டு அறைகளில் ஏற்புவலி நோயாளர்கள் குறிப்பாக குழந்தைகள் வைக்கப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது. இதற்கான மருந்து கூட போதிய அளவுவிநியோகம் செய்யப்படாததும், ஏற்கனவே கையிருப்பிலுள்ள மருந்துகள் காலத்திற்குப் புறம்பானதாயிருப்பதும் நிலைமையை மோசமடையச் செய்கிறது. யாழ்ப்பாணத்தில் ஏற்புவலி அதிகரிப்பதற்குக் காரணம் இங்குள்ள சுகாதாரநிலை மோசமாய் இருப்பதும், மக்கள் வாழும் சூழ்நிலையும் ஆகும்.

சுகாதார அதிகாரிகள் மட்டுமே இவ்விஷயத்தில் கவனம் எடுத்துச் செயலாற்றமுடியும்.

பெரிய வெள்ளி

கொழும்பு, வெள்ளி

பெரிய வெள்ளிக்கிழமை தினத்தை முன்னிட்டு நாட்டின் சகல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் இன்று விசேஷ பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் நடைபெறும். இன்று அரசாங்க வங்கி விடுமுறை தினமாகும்.

சிறுபோகத்தில் உப்பு விளைச்சல்

ஆனையிறவு உப்பளத்தின் சாதனை

யாழ்ப்பாணம், வெள்ளி

பல வருடங்களின் இடைவேளைக்குப் பின்னர் தற்பொழுது நிலவிவரும் வாய்ப்பான சிறுபோக பருவகாலநிலையைச் சாதகமாக்கிக் கொண்டு ஆனையிறவு உப்பளத்தில் உப்பு விளைவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய காலநிலையைச் சாதகமாக்கிக் கொண்டு உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கத் தொடங்கியது ஆனையிறவு உப்பளத்தின் ஓர் சாதனையென்று கருதப்படுகின்றது.

ஆனையிறவு உப்பளச் சுப்பரிண்டன் திரு. ஆர். ஆர். எஸ். நல்லையாவின் துரித முயற்சியினாலும், உப்பளப்பகுதி உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ள இம்முயற்சி, நல்ல பலனைக் கொடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுபோகத்தின்போது ஆனையிறவு உப்பளத்தில் உப்பு உற்பத்தி அண்மைக்காலத்தின்போது ஆரம்பிக்கப்படவில்லை. நாட்டில் உப்புத் தட்டுப்பாடு நிலவிவரும் இச்சமயத்தில் ஆனையிறவு உப்பளத்தில் சிறுபோக விளைச்சல் ஆரம்பிக்கப்பட்டது நல்லதொரு அறிகுறியாகும். ஆனையிறவில் உப்பு விளைவிப்பதற்கான முயற்சிகள் கேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

தற்பொழுது நிலவும் சாதகமான பருவகாலநிலை தொடர்ந்து கீடிக்குமாயின் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு உப்பு இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவில் இங்கு உப்பு விளைவித்தல் சாத்தியப்படுமெனச் சொல்லப்படுகிறது.

பிரஜாவுரிமையற்ற மாணவர்கள்: பாடசாலையில் சேர்வதில் கஷ்டம்

அநுராதபுரம், வியாழன்

பிரஜாவுரிமை அற்றவர்களின் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதில் தடையேற்பட்டுள்ளதால் பெற்றோர் பெரும் கவலைகொண்டுள்ளனர். இவ்வருடம் சூரியாகாப்பத்தினி அரசினர் சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலையில் சேர விண்ணப்பித்த சுமார் அறுபது மாணவர்களின் விண்ணப்பம், அவர்கள் பிரஜாவுரிமை அற்றவர்கள் என்ற காரணத்தால் நிராசரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இப்பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கமும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக ஐக்கிய வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மட்டும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலைக்கு அரை மைலுக்குட்பட்ட தூரத்தில் இருந்த

(6-ம் பக்கம் பார்க்க)

மனிவாக்கு

ஒருவர் எவ்வளவுவேலை செய்கிறார் என்பதைவிட, எவ்வளவு அன்புடன் வேலை செய்கிறாரென்பதையே கடவுள் நிறுத்துப் பார்க்கின்றார். யார் அதிகம் அன்புசெய்கின்றாரோ அவரே அதிகப் பணி செய்பவராவார்.

— தாமஸ் கெம்பிஸ்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணமகோபகிருஷ்ணன்
பங்குனி 14 ஆ (27-3-64)

ஆஸ்பத்திரி நிர்வாகச் சீர்கேடு

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியின் நிர்வாகத்தைப்பற்றி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் பகிரங்கமாகத் தெரிவித்துள்ள கருத்து கவலை அளிப்பதாகும். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைப்பற்றி பலரும் பலபுகார்கள் கூறிவந்திருக்கின்றனர். இந்தப் புகார்களில் எவ்வளவுதூரம் உண்மையிருக்கிறதென்பதற்கு நிகர் மரணவிசாரணை அதிகாரி சமீபத்தில் நடத்திய மூன்றுமரண விசாரணைகளின் தீர்ப்பில் தெரிவித்துள்ள அபிப்பிராயம் தக்கசான்று.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வந்த நோயாளி ஒருவர் நான்குமணி நேரமாக எவ்வித வைத்திய உதவியும் அளிக்கப்படாமல் கீழே விழுந்திருந்தாராம். இதன் காரணமாக மரணமடைந்த சம்பவம்பற்றி மரணவிசாரணை அதிகாரி தமது தீர்ப்பில் குறிப்பிட்டு ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் சீர்கேட்டைக் கண்டித்திருக்கிறார். தீப்புண்களினால் மரணமடைந்த மற்றொரு இளம்பெண்ணின் மரணம்பற்றி விசாரணை நடத்திய அதே அதிகாரி, இச்சம்பவம்பற்றி பொலிசாருக்கு அறிவிக்கும்படி நோயாளிகளை அனுமதிக்கும் உத்தியோகத்தர் உத்தரவிட்டிருந்தும் அப்பெண் இறக்கும் வரை பொலிசாருக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் ஆஸ்பத்திரி நிர்வாகச் சீர்கேட்டுக்கு இதுவும் ஒரு உதாரணமென்றும் தெரிவித்திருக்கிறார்.

நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதும் நோயாளிகளைக் கவனிப்பதும்தான் ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்களினதும் தாதிமார்களினதும் மற்றும் சிப்பந்திகளினதும் முக்கிய கடமை. ஆஸ்பத்திரிக்கு அதுவும் அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைபெற வருபவர்கள் பெரும்பாலும் பணவசதி குறைந்த எளிய மக்களேயாவர். டாக்டர்களும் தாதிமார்களும் மற்றும் ஆஸ்பத்திரி சிப்பந்திகளும் நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதைப் பெரும் சேவையாகக் கருத வேண்டுமே தவிர தமது வருமானத்தையே பெரிதாகக் கருதக்கூடாது. பொதுமக்களின் பணத்தைத்தான் இவர்கள் சம்பளமாகப் பெறுகிறார்கள் ,பொதுமக்களுக்குக் குறிப்பாக நோயாளிகளுக்குச் சேவைசெய்ய வேண்டியது அவர்களது தலையாய கடமையாகும்.

சிகிச்சை பெற்று நோயைக் குணப்படுத்தலாம் என நம்பி வரும் நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரியே மரணப்படுக்கையாகிவிடுமாயின் அது பொது மக்களுக்குச் செய்யும் பெருந்தீங்காகும். டாக்டர்களில், தாதிகளில் இச் சேவையை உண்மையாகவும் மேலாகவும் செய்பவர்கள் பலருண்டு ஆனால் இதில் எக்காரணம்பற்றியும் கவனக் குறைவாக இருப்பதாயின் அது மன்னிக்க முடியாததும் மற்றும் பெரும் பாவமுமாகும். பொதுவாக பல ஆஸ்பத்திரிகளிலும் சீர்கேடு நிலவுகிறதென்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஒரு சாக்காகக்கூறக்கூடும். தன்குற்றத்தை மறைப்பதற்காக பிறர் குற்றத்தை எடுத்துக் காட்டுவது சரியாகாது.

பலரும் பலதடவைகளிலும் ஆஸ்பத்திரி நிர்வாகம்பற்றிக் குறை கூறியுள்ள போதிலும் நிகர் மரணவிசாரணை அதிகாரி தகுந்த ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியுள்ள சீர்கேடுகளை உடனடியாகக் கவனத்துக்கெடுத்து நிலைமையைச் சீர்செய்ய வேண்டியது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் கடமை. இனியும் அசிரத்தையாக இருப்பது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் நிர்வாகம் சீர்கேட்டுக்குப் பெயர்பெறச் செய்துவிடும். இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் யோசித்து, இவ்விதபுகார்களுக்கு இடமின்றி உடன் செய்வரென்றே நம்புவோம்.

சைவசமய கருத்தரங்கம்

நல்லூர், வெள்ளி சைவசமய வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து முடிவு செய்வதற்காக சைவப் பிரமுகர்களின் கருத்தரங்கம் இன்று நடைபெறவிருக்கின்றது.

வண்ணை காவலர் பாடசாலை மண்டபத்தில் இன்று மாலை நடைபெறவிருக்கும் இந்தக் கருத்தரங்கில் சென்னை சைவசித்தாந்த மகா சமாஜ மகா நாட்டுத் தலைவரும் மலேசியா சைவக் கழகத் தலைவருமான திரு. கா.இராமநாதன் கலந்து கொள்வார். யாழ்ப்பாணத்திலுள்ள சமய ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் இந்த கருத்தரங்கில் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்

திரு. இராமநாதன் சனிக்கிழமை இந்தியாவுக்குப் பிரயாணமானார்.

ஈராக் அதிபர் டில்லி வருகை

புதுடில்லி, மார்ச் 26
ஈராக் ஜனாதிபதி பீல்ட் மார்ஷல் அப்துல்சலாம் அரீப் 7 நாள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு இன்று புதுடில்லி வந்துசேர்ந்தார்.

ஜனாதிபதி ராதாகிருஷ்ணன், திரு. லால்பகதூர் சாஸ்திரி, இதர மந்திரிகள், டில்லி மேயர் ஆகியோர் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர். 21 மரியாதைக்குண்டுகள் தீர்க்கப்பட்டன.

சிலுவையும் மரணமும்

(வண. பிதா, பெர்னட் கொன்ஸ்டன்டைன்)

சிலுவையும் மரணமும் கிறீஸ்துவின் மகிமைக்குக் காரணமாயிருந்தன; எங்ஙனம்?

"மனுமகன் மகிமைப்படும் படியான வேளை வந்தது" அரு. (12-23) உலக வரலாற்றை ஒட்டிப்பார்ப்போமேயானால் இது நன்கு புலனாகும். எந்த உண்மை இலட்சியவாதியும் தன் மரணத்தினூலேதான் மகிமையடைகிறான். கடந்த வருடம் கண்ணிமைக்கும்நேரத்துள்ளே துப்பாக்கிகுண்டு ஊடுருவிச் செல்ல உயிர்நீத்த உத்தமனை அறியாதாருந் அறியவேண்டிய ஆவல் பிறந்தது. அகில உலகமுமே ஆழ்ந்த கவலையில் அமைதியை இழந்தது. அந்த மகான் பிறந்த போது அல்லது அன்று அவன் மணஞ்செய்துகொண்டபோது ஏன் குஷ்யப் படைகளை வெற்றிகரமாகப் பணிய வைத்து வந்தவழியை நோக்கச் செய்தபோது இந்தக் கென்னடியின் மகிமை மக்களுக்குப் புலனாகவில்லையே. ஏன்?

ஒன்று? இரண்டா? சரித்திரம் பகரும் சான்றுகளே இந்த உண்மையைத் தானே திருப்பிக்கொண்டிருக்கின்றன. வாழ்ந்த நாளெல்லாம் அடிமை வாழ்வை அகற்ற வேண்டும் என்னும் ஆசையால் உந்தப் பெற்று அதில் வெற்றியும் கண்டு அடிமையகற்றிய அண்ணலான ஆபிரகாம்லிங்கனையே மக்கள் மகிமைப்படுத்திய தெப்போ? உயிருடன் வாழ்ந்த நாளில். எவராவது மகிமைப படுத்தினர்களா? ஏட்டைப் புரட்டினால் எண்ணற்ற உண்மைகள் இதற்குச் சான்று பகரும். இதற்கு எட்டுணையும் ஐயம் வேண்டியதில்லை. உலக நடைமுறை இவ்வாறியம்ப:

உத்தமன் யேசுவின் உயிர் விடுகைபகருவதென்னவென்று நோக்குவாம். நாளோ பெரிய வெள்ளிக்கிழமை. நேரமோ பிற்பகல் மூன்றை முடித்துக் கொள்கிறது. கல்வாரி மலையின் உச்சி; எங்கும் அமைதி இல்லை; அந்தகாரமென்றுதான் சொல்லவேண்டும். ஆதவன் தன்ஒளி கொடுக்க ஒப்பவில்லை. இரு கள்வர் நடுவே கள்வருடன் கள்வனுய்ச் சிலுவையிலே மூன்று ஆணிகளிலே தொங்கிக்கொண்டிருக்கும் பிரலாபத்துக்குரிய காட்சியைப் பார்த்தா யாருக்குத்தான் சுயஉணர்வு நிலைத்திருக்கும். இந்த அழுகைப் பிரலாபத்துக் காட்சியிலே கண்ணீரும்கம்பலையுமாய் மூன்று நான்கு உருவம் சிலுவையடியிலே தோன்றுகின்றன. இந்தக் காட்சியைக் கண்டுகளிக்கவந்த கூட்டமா? அல்லது வீதியிலே வியப்புப் பார்க்கும் விநோதப் பிரியக்கும்பலா? இல்லையில்லை. அப்படித் தூரந்துலையிலே உள்ளவர்களாலுலர்; சிலுவைமரத்திலே தொங்கிக்கொண்டிருக்கும் எம்பெருமானின் அன்னையல்லவா ஒருவர். பெற்ற தாயின் நிலையைச் சொல்லவும்வேண்டுமா? சொல்ல நாவெழுமா? ஐயகோ! மற்ற உருவங்கள் கிளேயோப்பா மரியம்மாளும், மரிய மக்தலேனம்மாளும் அருளப்பருமேயாவர். ஒன்பதாம் மணிவேளையிலேயே தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது. யேசுநாதரோ உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு! "பிதாவே! என் ஆத்மத்தை உமது கையில் ஒப்புக்கொள்கிறேன்" என்றார். இவைகளைச் சொல்லி உயிர் விட்டார். அப்போது சம்பவித்த பூமியதிர்ச்சியையும், மற்றவைகளையும் கண்ட மாத்திரத்தில் அவ்விடம் நின்ற சென்தூரியனும் காத்துநின்றவர்களும் "மெய்யாகவே இவர் தேவகுமாரனாய் இருக்கிறார்" என்று சொல்லித் தங்கள் மார்பில் அறைந்துகொண்டு திரும்பிப் போனார்கள். இச்சம்பவம் பகருவது யாது? உண்மையாகவே கிறிஸ்துவின் மரணம் அவரை மகிமைப் படுத்தியதென்பதே. ஏனெனில்

(5-ம் பக்கம் பார்க்க)

பாவிகளை தேடிவந்தார் யேசு

— ஆசீர்வாதம் ஹென்றி —

கிறிஸ்து பிறந்தார். ஏன் பிறந்தார், எதற்காகப் பிறந்தார், என்பதுலகம் சதாசிந்திக்க வேண்டியதொன்று. எங்கும் நிறைந்தவரும், எல்லாம் அறிந்தவரும், சர்வவல்லபரும் பரிபூரண பரிசுத்தருமாகிய தேவனை அகிலம் மறந்தது. வாழ்க்கைச் சுகபோகங்களின் சுழல்காற்றினிலே அள்ளுண்டு ஆழ்ந்து அக்கிரமங்களின்மேல் அக்கிரமங்களைப் புரிந்து அழிந்து தொழிந்தது உலகம். கெட்டுப்போன இந்த மக்கட்சமுதாயத்தினை அளப்பெரும் அன்புக் கருணையும் வல்லபமும் வாய்ந்த ஆண்டவன் தாமே ஆட்கொண்டு மீண்டு இரட்சிக்க வேண்டியதாயிற்று.

பரிபூரணபரிசுத்தராகியதேவனுக்கு மாறுக மக்கட் சமுதாயம் புரிந்து கொண்ட அக்கிரமங்களின் கனத்துவமும் எல்லையற்றதுவே. எல்லையற்ற தோர் சாபத்தீட்டிற்கு எல்லை கடந்ததோர் பரிகாரிப்பும்வேண்டப்படுவது நீதியும் இன்றியமையாததுமன்றோ? எனவே வரம்பிகந்த வல்லபம்படைத்த பரம்பொருளாகிய ஒருவரே மனித அவதாரந்தாங்கி மண்ணுலகிற் போந்து இத்தகுபரிகரிப்புப் பணியினை மேற்கொள்வது அவசியமாயிற்று. இது வேதசாஸ்திர விற்பன்னர் கண்டமுடிவு இதுகாரணமாகவே பிதா-சுதன்-தூயஆவி என்னும் பரிசுத்தபரமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய "சுதன்" மனிதஅவதாரம் எடுத்து மனிதகுலத்தை மீட்கச் சித்தமாயினர். இதுவே அவரது மனிதஅவதாரத்தின் இலட்சியமாயிற்றென்க.

பாவிகளையே தேடி வந்தார் யேசு பாவி ஒருவன் மனந்திரும்பித் தன்பாவங்களுக்காய்ப் பரிகாரந் தேடுங்கால் பரலோகத்தில் தேவதூதர்கள் அதிக ஆனந்தம் கொள்வர் என்றுரைத்த நம்மீட்பர் தன் மூப்பதுமூன்று வருட வாழ்வு பாலேவனமாய் வரண்டு ஆன்மதாகத்தால் அலறும் அக்கால் பரமதேவன் தன் தனயனைத் தேற்ற அன்பும் அரியவோர் ஆன்மாவென உணர்கிறார். உலகினின்றும் தான் உயர்த்தப்பட்டால்உலக உயிர்களைத் தன்பால் இழுப்பதாய் அறைந்த வாக்கின் நிறைவாய் விளங்கும் முதற்றனி இவ்வான்மர. அவ்வுயிரின் கடைசி வேண்டுதல் யேசுவின் அன்பு இதயத்தில் வான்போல ஊடுருவுகின்றது. 'உன் பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டன' என்று திமிர்வாதத்தால் வாடியவனுக்கு உரைத்த தெய்வம்-, "இனி பாவத்தைச் செய்யாதே" என்று பாவத்தில் பிடிபட்டவளுக்குயிர்ப்பிச்சைஅளித்தார். அதிகாரிகளும் வேதபோதகர்களுமாக அக்காலத்து எதிர்த்த பெருமக்களோ அவரில் காய்மகாரங் கொண்டனர். பொல்லாப் பழிகளைச் சுமத்தினர். தன்னை "அரசன்" என்கின்றான் என்றனர். புதிய போதனைகளைப் புகுத்தித் தங்கள் மதசாதனைகளையெல்லாம் பேதப்படுத்துகிறான் என்றார்கள்.

இவ்வாறு பல்வேறு பழிகளைச் சுமத்தி அவர்மேல் பாரச் சிலுவையை தோழிற்

5-ம் பக்கம் பார்கக

ஐயாறன் எழுதுவது

இலங்கைக்கு ஒரு சர்வாதிகாரி தேவை என்று தம்பதெனியா எம். பி. யான ஆர். ஜி. சேனநாயக்கா ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்.

"இலங்கையில் சர்வாதிகாரி பதவிக்குஉற்சாகமுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்டவர், 1964-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1ந் திகதி சர்வாதிகாரியாக நியமிக்கப்படுவார்.

"எந்தவிதமாகவும் இப்பதவிக்கு ஆதரவு தேடுவது கூடாது. வி. ஐ. டி, பொலிசார் நேர்முகப் பரீட்சை நடத்துவர். இதுவரை ஒரேயொரு மனுதான் கிடைத்துள்ளது" என்று "இலங்கை சர்வாதிகார அரசாங்கக் கமிட்டி"யின் சார்பாக, ஆர். ஜி. இந்த கேலி விளம்பரம் செய்திருக்கின்றார்.

* * *

இப்போது எங்கும் சர்வாதிகார ஆட்சியைப்பற்றித்தான் பேச்சு. பிலிப் குணவர்த்தனு, தம்மை சர்வாதிகாரியாக்கினால் அப்பதவியை ஏற்று நடத்தத் தாம் தயார் என்றும் பகிரங்கமாக ஒரு கூட்டத்தில் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல; தாம் சர்வாதிகாரியானால், டட்லி, ஜே. ஆர். முதலிய "சதிகாரர்கள்" மீது நடவக்கை எடுப்பதாகவும் பயமுறுத்தி இருக்கின்றார்.

இதனுல்தானோ என்னவோ, கவர்னர் ஜெனரலை டட்லி இருமுறை சந்தித்துப் பேசியுள்ளதுடன், சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டால் அதை எதிர்த்துப் போராடவேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

ஆனால் இங்கு உண்மையில் சர்வாதிகார ஆட்சி ஏற்படுமா? பிலிப் சர்வாதிகாரியாவாரா? இதைப்பற்றி விசாரித்ததில், இங்கு சர்வாதிகார ஆட்சி ஏற்படுவது மிகவும் சந்தேகமே என்றும், இடதுசாரி ஐக்கிய முன்னணியுடனே ஒரு கூட்டு அரசாங்கத்தை அமைத்து, இப்போதுள்ள அரசாங்கம் ஒரு வருஷத்தை ஓட்டிவிடக் கூடுமென்றும் ஸ்ரீமான் அரசியல் வட்டாரம் தெரிவித்தார்.

* * *

பிலிப்பின் சகோதரரான ராபர்ட்டே, அவரை மறைமுகமாகத் தாக்கி இருக்கின்றார். "செத்துக்கொண்டிருக்கும் எஸ். எல். எப். பி. அரசாங்கத்துக்கு பிராணவாயு அளிக்க மக்கள் யாரும் தயாராக இல்லையென்றும், இடதுசாரிஐக்கிய முன்னணியின் பெயரால் சில சுயநலமிகள் இடதுசாரிஐக்கிய முன்னணியின் செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடுமென்றும், இந்த முயற்சியை எதிர்த்து மக்கள் போராடவேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

இந்த லட்சணத்தில் பிலிப் சர்வாதிகாரியாவதென்பது முடியக்கூடியதா? அப்படியே அவர் சர்வாதிகாரியானாலும், ஒருசில நாட்களாவது அவர் அப்பதவியில் இருக்கமுடியுமா?

சர்வாதிகாரிகளைப் பிறர் நியமிப்பதில்லை. இந்த அரசாங்கத்தையும், பிரதமர் ஸ்ரீமாவோவையும் பிலிப் காரசாரமாகத் தாக்கி இருக்கிறார். இதை அவர் ஞாபகப்படுத்திக்கொண்டால் அவரது தன்மானமே இந்த அரசாங்கத்தில் இராதபடி அவரைத் தடுக்கும்.

இராணுவ ஆதரவு இல்லாமல் யாரும் இக்காலத்தில் சர்வாதிகாரியாக முடியாது. இலங்கை இராணுவ அமைப்பைக் கவனிக்கையில், பிலிப் போ அல்லது வேறுயாரோ சர்வாதிகாரியாக முடியுமா?

(6-ம் பக்கம் பார்க்க)

எதிர்க்கட்சியுடன் வாக்களித்த 25 கன்சர்வேட்டிவ்கள்

பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட மானநஷ்டம்

லண்டன், மார்ச் 26

ஒருபிரதான மசோதாவுக்கான திருத்தம் ஒன்றில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரேஒரு வாக்கு மட்டும் மெஜாரிட்டியாகப் பெற்றது குறித்து கன்சர்வேட்டிவ் தலைவர்கள் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள்.

நிர்ணயவிலைகளை ஒழிப்பது பற்றிய இந்த மசோதாவுக்கு ஒருவாக்குமட்டும் அதிகப்படியாகப் பெற்ற அரசாங்கத்தை நோக்கி "ராஜினாமாச் செய்யுங்கள்" என தொழிற்கட்சி அங்கத்தினர்கள் பலத்த கோஷமிட்டனர்.

சுமார் 25 கன்சர்வேட்டிவ் அங்கத்தினர்கள் தொழிற்கட்சியுட சேர்ந்து ஓட்டளித்ததாகவே நம்பப்படுகிறது. அரசாங்கத்துக்குச் சாதகமாக 204 வாக்குகளும் பாதகமாக 203 வாக்குகளும் கிடைத்தன. இது அரசாங்கத்தின் மிகுமையைப் பாரதூரமாகப் பாதித்திருக்கிறது என்று பார்வையாளர்கள் கூறினர். ஆனால் இவ்விதத் தோல்வியால் அரசாங்கத்தின் ராஜினாமாவுக்கு அவசியம் இல்லை எனக் கூறப்பட்டது.

மலேஷியா பற்றிய மணிலா சமாதான யோசனை

நிபந்தனைகளுடன் ஏற்றதாய் டாக்டர் சுபந்திரியோ அறிவிப்பு

பாங்காக், மார்ச் 26

மலேசியா பிரச்னையைத் தீர்க்க பிலிப்பைன்ஸ் தெரிவித்த யோசனையை சில நிபந்தனைகளுக்குட்பட்டு இந்தோனேஷியா ஏற்றிருக்கிறது என அந்நாட்டு வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினார்.

பிரச்னையில் மத்தியஸ்தம் செய்ய பிலிப்பைன்ஸ் முன்வந்திருக்கிறது. இதற்கான யோசனை ஒன்றையும் அது தெரிவித்திருக்கிறது.

மலேசியா, சிங்கப்பூர், வடபோர்னியோ, ஸரவாக் ஆகிய பிரதேசங்களைக் கொண்டமலேஷியாவை பிலிப்பைன்சும், இந்தோனேஷியாவும் அங்கீகரிக்கவில்லை.

டாக்டர் சுபந்திரியோ கராச்சி வழியாக ஹாலந்துக்குச் செல்லவிருக்கிறார். இந்தோனேஷியா-ஹாலந்து உறவை நெருக்கமாகக் கொண்டு வரும் முயற்சியாக அவர் இத்தூதை மேற்கொண்டிருக்கிறார்.

ஹாலந்து வெளிநாட்டு மந்திரி டாக்டர் ஜோஸப்லுன்ஸின் அழைப்பின் மீது செல்லும் டாக்டர் சுபந்திரியோ, ஜூலியானா மகாராணியையும் சந்திப்பார். அவரது விஜயம் இருநாடுகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுவதற்கான ஒரு திருப்பமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் சுபந்திரியோ வழியில் கராச்சி, கெய்ரோ, அல்ஜீரியா, பாகிஸ்தான் ஆகிய நகரங்களில் தலா இரு இரவுகள் தங்கியபின் ஏப்ரல் 1-ம் திகதி ஹாலந்தை அடைவார்.

நிருமதி கென்னடி பதில் அனுப்புகிறார்

துக்கம் தெரிவித்து எழுதியவர்களுக்கு

வாஷிங்டன், மார்ச் 26

ஜனாதிபதி கென்னடி சென்ற நவம்பர் 22-ந் திகதி கொலையுண்டது குறித்து வருத்தம் தெரிவித்து உலகம் முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் அனுப்பிய செய்திகளுக்கு திருமதி ஜாக்லின் கென்னடி பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதியின் மரணவிசாரணை வெளிநாடுகளிலிருந்து 1,25,000 பேர் கடிதம் எழுதியுள்ளதாக மதிப்பிடுகிறார்கள். இவர்களுக்கும், கடிதம் எழுதிய அமெரிக்கர்களுக்கும் திருமதி கென்னடியின் பதில் கிடைக்கும்.

ஒரங்களில் கறுப்பு நிறம் அச்சிடப்பட்ட வெள்ளைநிற அட்டையில் அவர் எழுதி உள்ள பதிலில் பின்வரும் செய்தி பொறிக்கப்பட்டிருக்கும்.

"தங்கள் பரிவு குறித்து திருமதி கென்னடி பெரிதும் பாராட்டுகிறார். தங்கள் அன்பிற்கு அவரது நன்றி உரித்தாகுக."

பதில்கள் வாஷிங்டன் நகரிலிருந்து செவ்வாயன்று அனுப்பப்பட்டன. அமெரிக்காவிலும் வெளி நாடுகளிலிருந்தும் ஏறத்தாழ 9,00,000 கடிதங்கள் வந்தன. அதேகமாக உலகிலுள்ள எல்லா நாடுகளிலிருந்தும் தபால்கள் வந்திருந்தன.

நியூயோர்க், பாஸ்டன், வாஷிங்டன் ஆகிய நகரங்களைச் சேர்ந்த சுமார் 2,000 தொண்டர்கள் பதில் அனுப்பும் பணியில் தன்னார்வமாக உதவிசெய்தனர். துக்கம் தெரிவிக்கும் கடிதங்கள் இறுதியில் பாஸ்டன் நகரில் சேமிக்கப்பட இருக்கும். ஜோன் எப். கென்னடி நினைவு நூலகத்தில் இடம்பெறும். காலஞ்சென்ற ஜனாதிபதியின் கடிதங்கள், பத்திரங்கள் முதலியவையும் அங்கு பத்திரப்படுத்தி வைக்கப்படும்.

அல்ஜியர்ஸ் மகாநாட்டில் சீன-ரஷ்யபிரதிநிதிகள்மோதல்

அல்ஜியர்ஸ், மார்ச் 25

அல்ஜியர்ஸில் நடைபெறும் ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் சீனப்பிரதிநிதிகளும் ரஷ்யப பிரதிநிதிகளும் மேற்றுமோதிக் கொண்டனர்.

ரஷ்யப் பிரதிநிதி மகாநாட்டில் பேசும்போது சமாதானமாக உடனிருந்து வாழும் கொள்கையை சீனா இழிவுபடுத்துகிறதென்றும் எல்லைப் பிரச்னையைத் தீர்ப்பதில்பலாத்காரம் கூடாது என்ற யோசனையை சீனா எதிர்ப்பதாயும் குற்றஞ்சாட்டினார். எல்லைப் பிரச்னையைத் தீர்ப்பதில் சமாதான முயற்சிகளைக் கைக்கொள்ளுவதினாலும் சமாதானமாக உடனிருந்து வாழ்வதினாலும் ஏதாவது வைத்தியத்துக்கோ காலனி ஆதிக்கத்துக்கோ சரணாகதியடைவதாக அர்த்தமில்லை என்றும் அவர் கூறினார்.

அதேக ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் சீனாவின் போக்குபற்றித் தம்மிடம் கண்டனம் தெரிவித்ததாயும் ரஷ்யப்பிரதிநிதி குறிப்பிட்டார்.

இதற்குமுன் சீனப்பிரதிநிதி மகாநாட்டில் பேசியபோது ஓரளவு அணுசோதனைத்தடை ஒப்பந்தம் ஏகாதிபத்தியத்துக்கு உதவி செய்வதாய் இருப்பதாய்க் கூறினர்.

ஒரு கட்டத்தில் மகாநாட்டுக்குத் தலைமைவகித்த அல்ஜீரியப் பிரதிநிதி சீனப்பிரதிநிதியை எச்சரித்தார். மகாநாட்டைத் தாம் ஒத்திவைக்கப்போவதாயும் அவர் கூறினர்.

ரஷ்யாவும் சீனாவும் ஒரு சர்வதேச மகாநாட்டில் ஒன்றுக்கொன்று நேரடியாகத் தாக்கிக் கொள்வது இதுவே முதல்தடவை.

"மலேவசியத்தில் நேருவுக்கு இணையானவரில்லை"

மலேஷிய அதிகாரி கூற்று

கோலாலம்பூர், மார்ச் 26

"தம் எதிரேயுள்ள கூட்டத்தை அப்படியே மலேவசியம் செய்துவிடக்கூடிய அரசியல் தலைவர்கள் இன்று இரண்டே இரண்டுபேர் தான் உள்ளனர். ஒருவர் நேரு. மற்றொருவர் சுகர்ணோ. முன்னவர் நல்லதைக் கூறி வசீகரிப்பவர். அடுத்தவர் கெட்டதைச் சொல்லி மயங்க வைப்பார்."

பிரிட்டிஷ் நகரசபைத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் மலேவசியக்காரரான ஹென்றி பீனைத் என்பவரைப்பற்றி அபிப்பிராயம் கேட்டபோது மலேஷிய தேர்தல் கமிஷனர் முஸ்தபா அல்பக்ரீ மேற்கண்டவாறு கூறினர்.

பீனைத்தின் கருத்தைப்பற்றி தான் அறிய வந்தது குறித்து அவர் சிரித்துவிட்டுக் கூறியதாவது:-

"அது ஒரு பித்தலாட்டமாகவே எனக்குப் படுகிறது. என்ன நடக்கப் போகிறது என்று தெரியாமல், பலிகொடுக்கச் செல்லும் வெட்டுக் கடாக்களைப்போல் வாக்காளர் நடந்து கொள்வார்கள் என நான் நினைக்கவில்லை. கூட்டத்தை வசியப்படுத்த உண்மையான நிபுணரால் தான் ஆகும். அவ்வாறு செய்யக் கூடியவர்கள் இரண்டு பேர்தான் உளர். நேருவும், சுகர்ணோவுமே அவர்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறந்த மத்தியஸ்தர்

ஜெனிவா, மார்ச் 26

சைப்ரஸில் ஐ. நா. மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கும் சுவீடனுள்ளபின்லாந்து ஸ்தானிகர் திரு. ஸகாரியோ மியோஜா, அமைதியும், கடின உழைப்பும் கொண்ட அறிவாளி என ஸ்டாக்ஹோமிலுள்ள ராஜதந்திரிகளால் வருணிக்கப்படுகிறார். இலக்கியத்திலும், சினிமா, நாடகம் ஆகிய கலைகளிலும் அவர் ஆர்வமுடையவர்.

நடுத்தர உயரமும், அழகான தலைமயிரும் பொருந்திய அவர், சிறந்த உணவு, சிறந்த மதுபானம், சிறந்த பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உடையவர்.

1911-ம் ஆண்டில் பிறந்த இவர், 1943ல் பின்லாந்து வங்கியின் கவர்னராகவும், 1944-ம் ஆண்டு தம் 32-ம் வயதில் நிதிமந்திரியாகவும் பதவி வகித்தார். 1956 ல் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டு மூன்றாவது இடத்தைப் பெற்றார். விவாகமான அவருக்கு ஒரு மனைவியும், ஒரு மகனும், ஒரு மகளும் உண்டு பிரிட்டன், கிரீஸ், துருக்கி, சைப்ரஸ் ஆகிய நாடுகள் தங்கள் நவக்கிரக நியமனத்திலிருந்து விடுபட்டு, இவரையே சைப்ரஸில் மத்தியஸ்தராக ஏற்றன.

'பாதுகாப்புக்கு ஐந்தாண்டு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது"

திரு. சாவன் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 26

"முன்பு எல்லையில் சீன அபாயத்தை மட்டும் சமாளிக்க இந்தியா தற்காப்பு நடவடிக்கை எடுத்து வந்தது. தற்போது மாறுபட்ட நிலவரம் காரணமாக வடஎல்லை முழுவதையும் இந்தியத்துருப்புக்கள் பாதுகாக்க வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளது" என பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் தெரிவித்தார்.

தற்பாதுகாப்புத்தயார்நிலைக்கான ஐந்தாண்டுத் திட்டமொன்றை தற்போது வகுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

"சில மாறுபட்ட நிலைகள் காரணமாக நீண்டகால பாதுகாப்புத் தேவைகள் தற்போது கவனிக்கப்படுகின்றன. உடனடித் தேவைகளும் புறக்கணிக்கப்படுவதில்லை. சென்றஆண்டு உடனடி பாதுகாப்புத் தேவைக்கு திட்டமிட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. ஏனெனில் அடுத்துவரும் தினங்களில் சீனர் என்ன செய்வர் என்பது நிச்சயமில்லாது இருந்தது. தற்போது பாதுகாப்புப் பிரச்னையை நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் நோக்கும் நிலையில் இருக்கிறோம்" என்றும் மந்திரி கூறினார்.

கோவா ஆட்சேபம்

பஞ்சிம், மார்ச் 26

ஐ. நா.விலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. அட்லாய்ஸ்டீவன்ஸன் தமது பிரசங்கம் ஒன்றில் கோவா இந்தியாவுடன் இணைக்கப்பட்டதை, ஒரு ஆக்கிரமிப்பு என வருணித்தது குறித்து கோவா சட்டசபை ஆட்சேபத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

ஜாப். மந்திரி ராஜினாமா

தூதர் குத்தப்பட்டதன் விளைவு

டோக்கியோ, மார்ச் 26

அமெரிக்க ஸ்தானிகர் குத்தப்பட்டது காரணமாகத் தமது "அரசியல் பொறுப்பை" உத்தேசித்து ஜப்பானிய உள்நாட்டு மந்திரி டகாஷி கயகாவா ராஜினாமாச் செய்திருக்கிறார்.

திரு. எட்வின் ஒ.ரெய்ஸ்ச்வார் என்ற அமெரிக்க ஸ்தானிகரை ஜப்பானிய இளைஞன் ஒருவன் தொடையில் குத்தியது பற்றி முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அவர் ஆஸ்பத்திரியில் சுகமடைந்து வருகிறார். ஸ்தானிகர் செல்வாக்குள்ள ஜப்பானிய குடும்பம் ஒன்றில் மணம் செய்திருக்கிறார்.

1 லட்சம் தபால்தந்தோர்

புதுடில்லி, மார்ச் 26

3-வது ஐந்தாண்டுத்திட்ட இறுதிக்குள் இந்தியாவில் ஒரு லட்சம் தபால்தந்தோர்கள் இயங்கும் என லோகசபையில் அறிவிக்கப்பட்டது.

10 லட்சம் டெலிபோன்கள்

பங்களூர், மார்ச் 26

பங்களூர் டெலிபோன் தொழிற்சாலை இதுவரை 10 லட்சம் டெலிபோன்களை உற்பத்தி செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கல்கத்தாவில் 114 பேர் கைது

கல்கத்தா, மார்ச் 26

கல்கத்தாவில் நேற்று இடதுசாரிக் கட்சிகள் நடத்திய ஒரு பொதுக்கூட்டத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் சிறுபான்மையினர் நடத்தப்படும் நிலைமை பற்றிக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தடையை மீறி ஊர்வலம் நடைபெற்றதைத் தொடர்ந்து 114 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

தெ. ஆபிரிக்கா வாபஸ் முடியாது

ஜெனிவா, மார்ச் 26

சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்திலிருந்து தென்னாபிரிக்கா தமது அங்கத்துவத்தை வாபஸ்பெற முடியாதுஎன அந்தஸ்தாபனத்தின் டைரக்டர் கூறியிருக்கிறார். ஒரு அங்கத்துவநாடு ஸ்தாபனத்திலிருந்து வாபஸ் பெறுமுன் 2 வருட நோட்டீஸ் கொடுப்பதே ஸ்தாபன விதி என்பதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

சுதந்திர தியாகிகள்

சென்னை, மார்ச் 26

சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட தியாகிகளின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும் என முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர்.

சீனா, பாகிஸ்தானுக்கு உதவிசெய்வோர்

ஜாம்ஷெட்பூர், மார்ச் 26

வகுப்புக் கலவரத்தைத் தூண்டிவிட முயல்பவர்கள் சீனாவுக்கும், பாகிஸ்தானுக்குமே உதவிசெய்கிறார்கள் என்று உள்நாட்டு மந்திரி திரு. நந்தா கூறினர்.

இந்தியாவுக்கு 34,294 டன் கப்பல்

பம்பாய், மார்ச் 26

"தேசபந்து" என்றபெரிய எண்ணெய்க் கப்பல் இந்திய அரசாங்கத்துக்குச் சொந்தமான கப்பல் கார்ப்பரேஷன், ஜப்பானிய என்ஜினியரிங் கம்பெனியிடமிருந்து பெற்றுக் கொண்டது. 34,294 டன் நிறையுள்ள இக்கப்பலின் விலை ரூ 2 கோடியே 12 லட்சமாகும்.

எம். ஜி. ஆர். இலங்கை வருவார்

யாழ்ப்பாணம், வெள்ளி

சினிமா நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும் சரோஜாதேவியும், தமிழ், சிங்கள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக நிதி வசூலித்துக்கொடுக்கும் பொருட்டு விரைவில் இலங்கைக்கு விஜயம்செய்வார்கள் எனத் தெரியவருகிறது.

இவர்கள் இருவரும் பங்கு கொள்ளும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இந்த நிகழ்ச்சிகள்மூலம் வசூலாகும் பணம், தமிழ்க் குழந்தைகளின் கல்விவளர்ச்சிக்கும், நிகழ்ச்சியின்போது, எம். ஜி. ஆர். சரோஜாதேவி நேரடியாக வசூலிக்கும் பணம் சிங்களக்குழந்தைகளின் கல்விவளர்ச்சிக்காகவும் வழங்கப்படும்.

மத்திய மாகாண சைவமகா சபை

கண்டி, வியாழன்

கண்டி மத்திய மாகாண சைவ மகாசபையின் 38-வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 27-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் ஆரம்பமாகும். அன்று புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவும், சில நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

யாழ். மாவட்டபாடசாலைகள்

விளையாட்டுப் போட்டி முடிவுகள்

இந்துக்கல்லூரிக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட 'ஏ' பிரிவு பாடசாலைகளின் உடற் பயிற்சி போட்டி செவ்வாய் கிழமை மாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான மேற்பிரிவிலும், மத்திய பிரிவிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றதோடு, ஆண்களுக்கான கனிஷ்ட பிரிவிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இரண்டாவது இடத்தை பெற்றது. பெண்களுக்கான மத்திய பிரிவிலும் கனிஷ்ட பிரிவிலும், பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி மூன்றாவது இடத்தை பெற்றதோடு, சிரேஷ்ட பிரிவிலும், பருத்தித்துறை மெதடிஸ் கல்லூரி நான்காவது இடத்தைப் பெற்றது.

திரு. எஸ். தணிகாசலம் பேசும் போது, இப்போட்டியில் பங்கு பற்றும் பாடசாலைகள் அதிகரித்துள்ளதால், இம்முறை இருபிரிவாக பாடசாலைகள் பிரிக்கப்பட்டதாகவும், இரு தினங்களும் நடந்த போட்டிகளில் 3500 மாணவ மாணவிகள் பங்கு பற்றினர்களென்றும், எல்லாப்பாடசாலைகளும், இம்முறை மிகுந்த அக்கறை எடுத்து போட்டியில் பங்கு பற்றியுள்ளதாகவும் கூறினார்.

சகலத்திலும் சிறந்த ஆண்கள் குழுவிற்கான சிலோன் இன்சூரன்ஸ் வெற்றிக் கிண்ணம் யாழ்ப்பாணம இந்துக் கல்லூரிக்கு (சிரேஷ்ட பிரிவு) வழங்கப்பட்டது. சகலதிலும சிறந்த பெண்கள் குழுவிற்கான சிலோன் இன்சூரன்ஸ் வெற்றிக் கிண்ணம் மானிப்பாய் மெமோரியல் கல்லூரிக்கு (சிரேஷ்ட பிரிவு) வழங்கப் பட்டது. சர்கியூட இன்ஸ்பெக்டர்ஸ் கிண்ணம், ஆண்களுக்கான கனிஷ்டபிரிவில் முதலிடம் பெற்ற மல்லாகம் ஆங்கிலப் பாடசாலைக்கும், மாவட்ட இன்ஸ்பெக்டர்கிண்ணம்மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற யாழ். இந்துக் கல்லூரிக்கும் வட இலங்கை சங்கீத சபைக் கிண்ணம் சிரேஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற யாழ். இந்துக் கல்லூரிக்கும் வழங்கப் பட்டன.

டாக்டர் எஸ். வி. துரைராஜா கிண்ணம் பெண்களுக்கான கனிஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற மல்லாகம் ஆங்கில பாடசாலைக்கும், கல்வி இலாகா பொழுதுபோக்கு கிளப் கிண்ணம் மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கும் ஏ. ரி. துரையப்பா கிண்ணம் சிரேஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற மானிப்பாய் மெமோரியல் கல்லூரிக்கும் வழங்கப்பட்டன.

ஆண்கள் மேற்பிரிவு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சண்டிலிபாய் இந்துக் கல்லூரி, மான்ஸ ஆங்கில பாடசாலை, மல்லாகம் இந்துக் கல்லூரி.

ஆண்கள் மத்தியபிரிவு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி, ஸ்கந்தவரோதயா, விக்னேஸ்வரா கல்லூரி

ஆண்கள் கனிஷ்ட பிரிவு

மல்லாகம் ஆங்கிலப் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யால்டன் கல்லூரி, அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி.

பெண்கள் சிரேஷ்ட பிரிவு

மானிப்பாய் மெமோரியல், யாழ்ப்பாணம் வேம்படி கல்லூரி, மகாஜனா கல்லூரி, பருத்தித்துறைமெதடிஸ் கல்லூரி.

பெண்கள் மத்திய பிரிவு

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஸ்கந்தவரோதயா, பருத்தித்துறை மெதடிஸ் கல்லூரி.

பெண்கள் கனிஷ்ட பிரிவு

மல்லாகம் ஆங்கில பாடசாலை, மானிப்பாய் மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி, பண்டைத்தரிப்பு பெண்கள் பாடசாலை.

"கல்வி வளர்ச்சிக்கு பெற்றோரும் பொறுப்பு"

காங்கேசன்துறை, புதன்

"பாடசாலைகள், கல்லூரிகள் அபிவிருத்தியில் பெற்றோர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டும். மாணவர்களது கல்வி வளர்ச்சி ஆசிரியர்களிடம் மட்டும் தங்கியிருக்கவில்லை. பெற்றோர்களும் மாணவர்களது கல்விக்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்கிக கொடுக்கவேண்டும்" என்று வலிவடக்கு வித்தியாதரிசி திரு. ஆ. சிவகுரு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்க விழாவில் பேசுகையில் கூறினர்.

மகாஜனக் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்க விழா, கல்லூரித் திறந்தவெளியரங்கில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. ஆ. சிவகுரு தொடர்ந்து பேசியதாவது:

மாணவர்கள் எதிர்காலத்தில் உத்தியோகத்தை நம்பி பிரமல் தொழில்துறைகளில் ஈடுபடவேண்டும். உடற்பயிற்சி கைத்தொழில்களில் ஊக்கம் காட்டவேண்டும். அப்போது தான் இளைஞர் சமுதாயம் தனது எதிர்காலத்தை வளமுள்ளதாக ஆக்கிக்கொள்ள முடியும்.

கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினமும் பேசினர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

பிரிட்டிஷ் ஆலோசகர் வருகிறார்

கொழும்பு, வியாழன்

பிரிட்டிஷ் தொழில்நுட்பக் கூட்டுறவுத் துறையின் அறிவியல் ஆலோசகரான டாக்டர் டபிள்யு. றெயில்ஸ்ரன், அறிவியல் நிறுவனங்களைப் பார்வையிடுவதற்காக இவ்வாரத்தில் இலங்கைக்கு வருகிறார். பிரிட்டிஷ் அறிவியல் உதவி பற்றி ஆராய்வதற்கு பல்கலைக்கழக உத்தியோகத்தர்களையும் அறிவியல் உத்தியோகத்தர்களையும் அவர் சந்திப்பார். டாக்டர் றெயில்ஸ்ரன் கொழும்புத் திட்ட நாடுகளுக்கு உதவி அளிக்கும் திட்டதோடும், பல்கலைக்கழகத்திலும் தொழில் நுட்பக் கல்லூரியிலும் உள்ள அறிவியல் பொறியியல், மருத்துவத் துறைகளுக்கு உபகரணங்கள் அளிப்பதற்கும் அனேக ஆண்டுகளாகத் தொடர்பு உடையவர்.

1950-ம் ஆண்டு தொடக்கம் கொழும்புத் திட்டத்தின்கீழ் பிரிட்டன் 3,750,000 ரூபாய் பெறுமதியுள்ள உபகரணங்களை இலங்கைக்கு அளித்துள்ளது. கொழும்புத் திட்டம் ஆரம்பித்தபிறகு 17,000,000 ரூபா பெறுமதியான உதவியை பிரிட்டன் இலங்கைக்கு அளித்துள்ளது. இலங்கையருக்குப் பயிற்சி அளிப்பதற்கும் பிரிட்டிஷ் அறிவியல் வல்லுனரையும் உபகரணங்களையும் கொடுப்பதற்குமே இவ் உதவி அளிக்கப்பட்டது. கொழும்புத் திட்டத்திலுள்ள நாடுகளில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் தவிர பெரும் தொகையான உதவி இலங்கைக்கே நல்கப்பட்டிருக்கிறது.

இன்று முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)

வெலிங்டன் விஜயா ஸ்ரீ கிருஷ்ணா
(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (திருகோணமலை)

விஜிதா மொடேர்ன் வெம்பிளி
(ஹட்டன்) (பதுளை) (கண்டி)

கல்யாணி
(காவலப்பிட்டி)

எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி
எஸ். ஏ. அசோகன்—நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

ஆர். ஆர். பிக்சர்ஸ்

பெரிய இடத்துப் பெண்

டைரக்ஷன்: ராமண்ணு
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன்
கதை-வசனம்: சக்திகிருஷ்ணசாமி

ஹலிபோரேஞ்

ஒவ்வொரு துளியிலும்

இரண்டு மூன்று தேக்கரண்டியளவு ஹலிபோரேஞ் தினமும் உங்கள் குழந்தைக்குக் கொடுத்து, திடமான எலும்புகளையும், வன்மையான பற்களையும், உறுதியான உடம்புகளையும் வளருங்கள். ஒரு வளரும் பிள்ளையின் எலும்புகள் திடம்பெற, பற்கள் வன்மையுற, உடம்பு உறுதியாகத் தேவைப்படும் அத்தனை ஜீவசத்துணவுகளையும், ஒவ்வொரு சொட்டு ஹலிபோரேஞ்சிலும் அபரிமிதமாக அடக்கப்பட்டிருக்கிறது. நீங்களுங்கூட தினமும் ஹலிபோரேஞ் பாவியுங்கள். தொற்று நோய், தடுமல் இவைகளை எதிர்க்கத் தேவைப்படும் பாதுகாப்பான ஜீவசத்துக்கள் A, D, C, இம்மூன்றும் ஹலிபோரேஞ்சிலுண்டு.

ஹலிபோரேஞ்சினால் உங்கள் குடும்பத்தைக் களையான குதூகலமான குடும்பமாக்குங்கள்.

ஹலிபோரேஞ்

எத்தனை நல்லது அருந்த இதுவே உங்களுக்கு நல்லது

இத்தொரு அலன்பரீஸ் தயாரிப்பு

AT-28

வானெலிநிகழ்ச்சிகள்

வெள்ளி 27-3-64

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இன்னாமியநற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் — எஸ். விஜயசித்தம்பி. 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 கிறிஸ்தவநிகழ்ச்சி, 9-30 விசேஷ கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-00 ஒலிபரப்பு முடிவுகள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 6-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 6-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 கதாப்பிரசங்கம் — வி. கே. ஆறுமுகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 நாடகம் பிராயச்சித்திரம் — எம். அஷ்ரப்கான், 9-15 பேச்சு — இராமாயணப்பண்பு — அருள்தியாகராசா 6-30 நேயர்விப்பம், 10-15 தேர்ந்தஇசை.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-00 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 காந்தி அஞ்சலி, 7-30 ஏகாம் பரேஸ்வர ஸுப்ரபாதம், 7-50 கே. வி. கைலாசம் — நாகஸ்வரம், 8-15 காரைக்குடி கம்பன்விழா வர்ணனை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 அருணாசலக்கவிராயர் — பாடல்கள், 2-45 வானிலை அறிவிப்பு.

மாலை 5-15 கே. வி.கைலாசம் — நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கிஎழும் பாரதம் — சித்திரம், 7-45 செம்பை வைத்தியநாதபாகவதர் — பாட்டு, 9-15 ஈஸ்டர் திருநாள் — ஏ. இருதயசாமி— பேச்சு, 9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப்பட இசை.

யாழ். கட்டழகன் போட்டி

நாளை நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

நாளை சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு, யாழ்ப்பாண நகரமண்டபத்தில், யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. தா. சதுரைராசா தலைமையில் யாழ்ப் பாணக் கட்டழகன் போட்டி மூன்றாவது தடவையாக நடை பெறுகிறது. இவ்வருடம் யாழ். கட்டழகன் போட்டிக்கு பெரும் ஆதரவும் வரவேற்பும் கிடைத் துள்ளதாக அமைப்பாளர் திரு. பத்மநாதன் தெரிவிக்கிறார்.

சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளாகத் தரம் பிரிக்கப்பட்டிருக் கும் யாழ். கட்டழகன் போட்டியில், சிரேஷ்ட பிரிவிற்கான போட்டியில் 7 பேரும், கனிஷ்ட பிரிவில் 8 பேரும் போட்டியிடுகின்றனர். இப் போட்டியில் பங்குகொள்ள தென்னிலங்கையிலிருந்தும், கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த மட்டக்களப்பு திருக்கோணமலைஆகிய இடங்களிலிருந்தும் கட்டழகர்கள் யாழ்ப்பாணம் வருகிறார்கள். இரு பிரிவுகளின் இறுதிப் போட்டிகளில் கலந்துகொள்வோர் விபரம் வருமாறு:-

சிரேஷ்ட பிரிவு:- ஏ. ரி.செபரத்தினம், ஜி. எச். ஜினசேன, கே. நல்லையா, பி. எம். ஞானதாதன், ஏ. ஞானசபை, வி. முத்துக்குமாரு, கே. சகாதேவன்.

கனிஷ்ட பிரிவு:- பி. அருமைநாயகம், ஜே. மரியநாயகம், கே. தங்கராஜா, பி. குமாரன், ஏ. குலசிங்கம், என். சற்குணராசா, ஏ. இராசரத்தினம், எஸ். மிருதின்ஜெயம்.

அண்ணா கழகம் வெற்றி

கொடிகாமம், வியா.

சாவகச்சேரி அண்ணா கழகத்திற்கும், குரும்பசிட்டி கழகத்திற்கும் குரும்பசிட்டி மைதானத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி அண்ணாகழகம் வெற்றிபெற்றது.

முதலாவது ஆட்டத்தில் அண்ணா கழகம் 15 - 2 புள்ளிகளும், மூன்றாவது ஆட்டத்தில் 15–12 புள்ளிகளும் எடுத்தது. இரண்டாவது ஆட்டத்தில் குரும்பசிட்டி கழகத்திற்கு 15-12 புள்ளிகள் கிடைத்தன.

வேத சிவாகம விஸ்வ வித்தியாபீடம்

சிலாபம், வியாழன்

இம்மாதம் 21-ந் திகதி நடைபெற்ற வேத சிவாகம விஸ்வ வித்தியாபீடஅறிஞர் குழுக்கூட்டத்தில் அர்ச்சகாசார்யதிலகம் பிரதிஷ்டாசார்யதிலகம், சிவாசார்யதிலகம், சிவாகமகலாநிதி, சிவமணி, சிவாசார்யசிரோமணி என்னும் பட்டங்களை அவ்வப் பரீட்சைகளில் சித்தியெய்துவோருக்கு வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இப் பரீட்சைகள் முறையே பி. ஏ. (பொது), பி. ஏ. (ஹானர்ஸ்), எம்.ஏ. பிஎச்.டி., எல். எல்டி., டி. லிட் ஆகிய பட்டங்களின் சம அந்தஸ்தைப் பெற்றவை.

வித்யாபீடம், வேதாத்யயன பூஷணம், பௌரோஹித்ய பூஷணம், சாதகாசார்ய பூஷணம், தத்வசாஸ்திர பூஷணம், சாஹித்ய பூஷணம், வியாகரண பூஷணம், ஆகம பூஷணம், சைவசித்தாந்த பூஷணம் ஆகிய உயர் தரஞ்சிப்பத்திரங்களையும் டிப்ளோமா வேதாத்யன சாதகதராதரம், பௌரோஹித்ய தராதரம், சைவக்கிரியை அறிவுத் தராதரம் ஆகிய தராதரப் பத்திரங்களையும் வழங்குதல்வேண்டும் எனவும் அறிஞர் குழு தீர்மானித்தது. பரீட்சைகளின் பாட விதானங்கள் விரைவில் வெளிவர இருக்கின்றன.

இளம்பெண் தற்கொலை

உடுப்பிட்டி, வியா.

கரணவாய் தெற்கு வெற்றியாவளவு என்னுமிடத்தைச் சேர்ந்த சிவப்பிரகாசம் தவமனி என்னும் இளம்பெண் கிருமிநாசினி அருந்தி மரணமானர்.

உடனடியாக மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சில மணி நேரங்களின் பின்னர் அவர் காலமானர்.

அண்மையில் மணமுடித்த இப்பெண்மணி பெற்றோரிடையே ஏற்பட்ட தகராறு காரணமாகவே தற்கொலை புரிந்தார் எனக் கூறப்பட்டது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. தம்பிப்பிள்ளை விசாரணை நடத்தியபின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

பாவிகளை . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கமத்தி கல்வாரி மலையின் உச்சி கண்டு அங்கே இருகள்வருக்கிடையில் மூன்று மணித்தியாலம், வானதிற்கும் பூமிக்குமிடையே ஆவி சேர்ந்து சிலுவை மரத்தில் தொங்கினர். கொடிய யூதர் வீர ஆவேசத்துடன் அவ்வேளை "நீ தேவகுமாரனுகில் இந்தச் சிலுவையைவிட்டுகீழே இறங்கு பார்க்கலாம்" என்றார்கள். இதற்காக தேவனிடம் தமது சத்துருக்களுக்காகப் பிரார்த்தித்தார்.

"பிதாவே! பிதாவே! இவர்கள் தாம்செய்வனயாதென அறியார், இவர்கள் பிழைபொறுத்தருள்க" என்றார். பரலோக, பூலோக, பாதாளமெனப்படும் மூன்று உலகத்தினையும் படைத்து, அளித்து, அழிக்க வல்ல எம்பெருமான் பூவுலகோர் பாவம் தீர்த்தற் பொருட்டுத் தமது ஆருயிர் நீத்து அன்பின் பலியாயினர்.

ஆண்டவர் தனது மரணத்தினால் எல்லோரையும் தம் மண்டை அழைத்தார்.

கிறிஸ்துநாதர் தமது பிதா இட்ட பணியை ஏற்று நிறை வேற்றினர். தமது பிதாவினிடத்தில் கொண்டிருந்த அத்தியாந்த அன்பை வெளிப்படுத்தவே மாமிசமானர். பிதாவிடம் வைக்கும் அன்பே எல்லாவற்றிலும் மேலானது என்பதை எடுத்துக்காட்டவே சிலுவையில் உயிர் நீத்தார். ஏனெனில் பிதாவின் சித்தத்திற்குக் கிழ்ப்படிவது அவருடைய மகிமைக்குக் காரணமாய் இருந்தது. "பிதாவின் சித்தம் எனது மாமிசம் என்று சொல்லி, அதை நிறைவேற்றி நிரூபித்தார். கிறிஸ்துநாதர் தமது மானிட வாழ்விலே நாம் எப்படி வாழவேண்டுமென்பதைவாழ்ந்துகாட்டினர். பெற்றோரின் சொற்படி அமைந்து நடந்து அவர்களிடும் பணிகளை அன்புடன் ஏற்று நடப்பதினால் தன் பெற்றோரை மகிமைப்படுத்துகின்றர் பிள்ளை இத்தன்மையையே எம்பெருமானும் வாழ்ந்து காட்டித் தமது சிலுவையினாலும் மரணத்தினாலும் உண்மையான மகிமை எது என்பதை எமக்குக் காட்டிச் சென்றுள்ளார்.

யேசுநாதருடைய பாடுகளும் மரணமும் இரட்சணிய கிரிகையாய், ஒரு மெய்யான பலியாய் மாத்திரமல்ல; சகலபலிகளிலும் மேலான பலியாகவும் இருக்கிறது. ஏனெனில் சிலுவைப் பலியில் குருவும் பொருளும் மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாகிய யேசுக்கிறிஸ்து வேயானபடியால் அதைவிடச் சர்வேசுவரனுக்குமேலான பலி பிறிதொன்றுமிருத்தல் முடியாது.

மூன்று நாட்களாகப் பிரிந்திருந்த தமது ஆத்மத்தையும் சரீரத்தையும் தமது சொந்த தெய்வீகவல்லமையினால் மீண்டும் ஒன்றுசேர்ந்து கல்லறையை மூடியிருந்த கல்லின் மேலிடப்பட்டிருந்த முத்திரைக்குப். பழுதொன்றும் வருவியாமல் கல்லறையை விட்டு மகிமைப் பிரதாபத்தோடு புறப்பட்டார். இவ்வாறு எவரும் மறுக்கமுடியாத விதமாகத் தம்மைத் தேவசுதன் என்று அத்தாட்சிப்படுத்தினர். சுதனுனவர் தம்மை மகிமைப் படுத்தும்படி பிதாவை வேண்டியதன் பயன் கிறிஸ்துவின் உத்தானமே.

இதுவல்லவோ பரியாதை வாரம்?

கொழும்பு, வியாழன்

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு பொதுமக்களிடமிருந்து 900க்கு அதிகமான புகார்கள் கிடைத்திருக்கின்றன. இதில் 200 புகார்கள் சாரதிகள், கண்டக்டர்கள் ஆகியோர் பிரயாணிகளிடம் மரியாதையின்றி நடந்து கொண்ட சம்பவங்களாகும். இதில் விசேஷம் என்னவென்றால் ஜனவரி பெப்ரவரி மாதங்களில் தான் இலங்கை போக்குவரத்து சபை மரியாதை வாரம் அனுஷ்டித்தது என்பதேயாகும்.

300-க்கு அதிகமானோர் கைதாகினர்

ஜாக்ஸன்வில்லி, மார்ச் 26

புளோரிடாவிலுள்ள ஜாக்ஸன்வில்லி நகரில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற நீக்ரோ ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து இப்போது அமைதி ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. 300-கு அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

குறிப்பு இல: L A 1197

காணி எடுத்தற் சட்டம்
(அத்தியாயம் 460)
7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற் பத்திரிகை இலக்கம் 13, 992 (பகுதி III ல்) பார்க்கவும்.

அட்டவணை

பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்:- தீவுப்பகுதி காரியாதிகாரியின் பிரிவு.

கிராமத்தின் பெயர்:- புங்குடுதீவு மேற்கு.

காணியின் பெயர்:- பிச்சம்பிட்டுக்கு தென்மேற்குப் பறையவெளி.

ஆரம்பப்பட இல: துண்டு இல:- ஆரம்பப்பட இல A 2410 ல் துண்டு 1 என்று விபரிக்கப்பட்டிருக்கிறது.

ஆ. பெருமையினு
உதவி அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்

கேள்வி விளம்பரம்

1. ஒப்பந்த வேலை— ஆவரங்கால் புன்னாகுளம் தெருஅமைத்தல்.
2. கேள்விப் பத்திரம்
   (1) கொடுத்தல்- 4-4-64, பி.ப. 1 மணிவரை.
   (11) ஏற்றல் - 6-4-64, மு. ப. 10 மணிவரை.
3. தகுதி- (1) பத்தாயிரம் ரூபா பதிவு ஒப்பந்தக்காரர்கள்.
   (11) கேள்விப்பத்திரப் பணம் ரூபா 50/-
   (111) பத்திரக் கட்டுப் பணம் ரூபா 05/-
4. விபரம் அறிதல்:
   (1) வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் அலுவலகம்,
   (11) புத்தூர் கிராம சபை அலுவலகம்.

சி. நடராசா,
தலைவர், கி. ச. புத்தூர்.
24-3-1964.

128

காரியதரிசி தேவை

யோகபுரம் I ம் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிரந்தரக் காரியதரிசி தேவை.

விண்ணப்பிக்கக் கூடியவர் 25 வயதுக்கு மேற்பட்டவர் 40 வயதுக்கு உட்பட்டவராய் இருத்தல்வேண்டும்.

S S C. தமிழ் சித்தியடைந்த தராதரப்பத்திரம்வேண்டும்.

இரண்டு வருடத்திற்குக் குறையாமல் ஓர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் காரிய தரிசியாகக் கடமையாற்றிய அனுபவம் உடையவர்.

ரொக்கப்பிணை 1000/-

ஆதனப்பிணை 2000/-

கொடுக்கவேண்டும்.

மாதம் வேதனம் ரூபா 90/- வழங்கப்படும். 2-4-54 க்குமுன் மனுப்பண்ணவேண்டும்.

விலாசம்:

கௌரவ காரியதரிசி,
யோகபுரம் I ம் பகுதி.
பல நோ. கூ. சங்கம்,
தணுக்காய்.

129

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பழைய மாணவர் சங்க வருடாந்தக் கூட்டம்

மேற்படி கூட்டம் 12-4-64 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி அறிவித்தல் கிடைக்காத பழைய மாணவர்கள் தயவு செய்து காரியதரிசிக்கு அறிவிக்கவும்.

K. இராசரத்தினம்,
கௌரவ செயலாளர்.

130

விளம்பரம்

தேவை

சீமெண்ட் பைக்கட் பேப்பர் தேவை.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை, 527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

72

அரைச்சலர்

அனேக மக்களின் ஆதரவு பெற்ற சன்னகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுப்பிரமணியம் & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

55

அரைச்சலர்

அனேக மக்களின் ஆதரவு பெற்ற சன்னகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25–4–64 வரை அரைச்சலார். 62

விற்பனைக்கு

மறவன்புலோ வள்ளக்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 5 ஏக்கர் நல்ல நெல்காணி விற்பனவுக்கிருக்கிறது. விலை விபரங்களை சி. தம்பையா, கிராமசபை, புத்தூர் விலாசத்தில் அறிந்துகொள்ளலாம்.

76

அரைச்சலர்

அனேக மக்களின் ஆதரவு பெற்ற சன்னகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள 6 வோல்ற் பற்றறிகள் விற்பனைக்கு உண்டு. முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், 6/8, ஸ்ராள்ல் ரோட், யாழ்ப்பாணம்.

78

அரைச்சலர்

அனேக மக்களின் ஆதரவு பெற்ற சன்னகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10–வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25–4–64 வரை அரைச்சலார். 62

கேள்வி விளம்பரம்

புலோப்பளை கிராம சபை அக்கிராசனரால் கீழ்க் குறிப்பிட்டிருக்கும் ரோட்டு அமைப்பதற்கும் கிணறுகள் வெட்டுவதற்கும் சீல் வைத்த கேள்விகள் பதிவுத் தபால் மூலம் 8-4-64 வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொரு வேலைக்கும் ரென்டர் பிணைப் பணமாக ரூபா 50-00-ம் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5-00ம்கட்டவேண்டும். கேள்விப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரங்கள் 7-4-64 பகல் 12 மணி வரையும் வளங்கப் படும்.

வேலையின் விபரங்கள் கிராம சபைக் கந்தோரில் அல்லது உள்ளூராட்சி காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

அ. யோ. இராஜகுரியர்
அக்கிராசனர்.
புலோப்பளைக் கிராமசபை,
பகை. 27-3-64.

கேள்வியின் விபரம்

1. மாசார் ஐக்கிய பண்டகசாலை முருட் அமைத்தல்.
2. ஊரவணிக்கன்பற்றில் பத்தாவளை என்னும் இடத்தில் கிணறு வெட்டிக் கட்டுதல்.
3. மாசார் சந்திக் குத்தி கிணறு வெட்டிக் கட்டுதல்.
4. சபைக் கட்டிடம் அமைத்தல். இதற்கு ரென்டர் கடைசித் திகதி 12-5-64.

13

தேசிய ஆராய்ச்சி சபைக்கு பணம் ஒதுக்க ஏற்பாடு

கொழும்பு, வியாழன்

தேசிய ஆராய்ச்சி சபை ஒன்றை நிறுவுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளுக்குப் பணம் ஒதுக்கப்படவிருக்கிறது. பல்வேறு அரசாங்க இலாகாக்களில் ஆராய்ச்சி நடத்துவதற்கான ஒரு மத்திய உறுப்பாக இது விளங்கும்.

இதுவிஷயமாக பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா விஞ்ஞான முன்னேற்ற சங்கப் பிரதிநிதிகளையும், பல நிரந்தரக் காரியதரிசிகளையும் சந்தித்துப் பேசினர்.

இதுசம்பந்தமாக பிரதமர் தொழில்துட்ப இலாகாக்களின் தலைவர்கள், நிரந்தரக் காரிய தரிசிகள் ஆகியோரைக்கொண்ட மற்றோர் மகாநாடு ஒன்றைக் கூட்டி, இந்த ஸ்தாபனத்தை நிறுவுவது சம்பந்தமாக மேலும் ஆலோசனை நடத்துவார் எனத் தெரிகிறது.

ஆசிய நாடுகளில் மலாயாவிலும் இலங்கையிலும் தான் இத்தகைய தேசிய ஆராய்ச்சி சபைகள் இல்லை எனக் கூறப்படுகிறது.

"இருநாகரிகங்களை இணைத்து வைத்தவர் கம்பர்"

காரைக்குடி கம்பன் விழாவில் மு. பொ. சிவஞானம் தலைமையுரை

காரைக்குடி, மார்ச் 26

"அரசியல் சட்டத்தினால் சாதிக்கத் தயங்குவதை பல்லாண்டுகளுக்குமுன் கவிச்சக்ரவர்த்தி கம்பன் நிறைவேற்றி வைத்தான்" என்று தமிழ்அரசுக்கழகத் தலைவர் திரு. மு. பொ. சிவஞானம் காரைக்குடி மீனாட்சி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் நேற்று ஆரம்பமான கம்பன் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கம்பன் காவியமாலிகை போல அலங்கரிக்கப்பட்டிருந்த இந்த மண்டபத்தில் விழாவை திரு. வெ. சாமிநாத சர்மா ஆரம்பித்து வைத்தார். கம்பன் கழக செயலாளர் திரு. சா. கணேசன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. சிவஞானகிராமணியார் தொடர்ந்து பேசுகையில் இந்தியாவின் இருபெரும் நாகரிகத்தைப் பிணைத்துவைத்து தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்திய பெருமை கம்பனையே சாரும் என்றும் தேசிய ஒருமைப்பாட்டின் சிற்பி அவர் என்றும் குறிப்பிட்டார்.

"ஆரிய தமிழ் நாகரிகங்கள் இரண்டும் வெவ்வேறானவை. ஆனால் அந்த இரண்டு நாகரிகங்களையும் இணைத்து வைத்த பெருமை கம்பனுக்கே உண்டு. இராமனுக்குத் தமிழ் தெரியுமோ என்னவோ தெரியாது. ஆனால் கம்பனுடைய கருத்து இராமனை உறவுபடுத்தும் தனிப்பாத்திரமாக அவனைப் படைப்பதுதான்" என்று திரு. சிவஞானம் கூறினர்.

"எதுதான் இடருமல் மோனை முறியாமல் ஆயிரம் ஆயிரம் தமிழ் கருத்துக்களை, தத்துவங்களை தமது காவியத்தில் அள்ளித் தந்துள்ளார் கவிச்சக்ரவர்த்தி கம்பர். அவர் பெரும் கவிஞனல்ல. சர்வகலாவல்லவன். அதனால்தான் முன்னே தோன்றிய காப்பியங்களையும் விட்டு தன்னேரில்லாத தலைவனையுடைய தனிக் காப்பியமாக விளங்குகிறது" என்று மு. பொ. சி. கூறினர்.

"புதுடில்லியிலுள்ள அமெரிக்க பள்ளியொன்றில் அமெரிக்க பெண் ஒருத்தி ஔவைப் பிராட்டிக்கு சிலையெடுத்ததாக பத்திரிகைகளில் செய்தி படித்ததும் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன். நாம் ஔவைக்குச் சிலையெடுப்பதாகவிருந்தால் ஓர் ஔவையா? இரண்டு ஔவையா? ஔவையின் உருவம் சரியா? சிலை எடுக்க வேண்டியது அவசியமா? என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வோம். ஔவைக்கு அமெரிக்கப் பெண் சிலையெடுக்கிறார் என்றால் அதுதான் தமிழ் வணக்கம். பிறநாட்டார் செய்யும் வணக்கம். ஔவை, கம்பன், இளங்கோவுக்கு இந்தியாவில் சிலை எடுத்தால் போதாது. அமெரிக்காவில், அதன் தலைநகரான வாஷிங்டனில் சிலை எடுக்கவேண்டும் அதற்கு நாம் உழைக்கவேண்டும்" என்றும், பொ. சி. கூறினர்.

இதன்பின் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரன் பேசினர்.

காலைநிகழ்ச்சிகளில் 'மங்கையர் மண்டலம்' இடம் பெற்றது. இதில் சுமித்திரை குணம்பற்றி திரு. எஸ். கே. இராமநாதனும் 'திருவின் திரு' என்ற தலைப்பில் சீதைபற்றி திரு. கா. சுப்பிரமுகம்மதுவும், மண்டோதரிபற்றி திரு. ராய. சொக்கலிங்கமும் உரைநிகழ்த்தினர்

அலங்கார திருவிழா

கொழும்பு, வியாழன்

திருக்கேதீச்சர அலங்கார உற்சவவிழா அடுத்தமாதம் 10-ம் திகதி தொடக்கம் 26-ம் திகதி வரை நடைபெறும்.

துணுக்காய்

கிராமசபை தேர்தல் போட்டியிலிருந்து ஒருவர் விலகினர்

துணுக்காய், புதன்

ஏப்ரலில் நடைபெறும் துணுக்காய் கிராமசபைத் தேர்தலில் நாலுவட்டாரங்களிலும் மொத்தம் 14 பேர் போட்டியிட நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்தார்கள். இதில் 4-ம் வட்டாரத்தில் போட்டியிடவிருந்த திரு. இராமநாதர் செல்லத்துரை தேர்தலிலிருந்து விலகுகின்றார். முதலாம் இரண்டாம் வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஐங்கரன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மின்னுமே மின்னிடைச்சேருமிருளுமே வெண்முகிலாய் எழுந்து மழை பொழிவான் தன்னைத், தன்னுமைத் தன்னைப்போலில்லாதனைத் தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தையாகி, என்னுமை யென்தை பெருமான் தனையே இருநிலமும் அண்டமுமாய்ச் செல்க்கவானே, அன்னுமை ஆவடுதண்டுறையுள் மேய அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே.

—திருநாவுக்கரசர்

நீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
From Friday 27th March 1964
Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
Morning Shows
Sat & Sun at 10-30 a. m.
● Basil Rathbone
● Anne Helm
IN
THE
MAGIC SWORD
(Eastman Colour) 81

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரல் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ். இந்து - மத்திய கல்லூரி கிரிக்கெட் போட்டி

பற்குணராஜா, சச்சிதானந்தத்தின் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். இந்துக்கல்லூரிக்கும் மத்திய கல்லூரிக்குமிடையே நேற்று பிற்பகல் ஆரம்பமான கிரிக்கெட் போட்டி. கிரிக்கெட் பிரியர்களுக்கு நல்விருந்தாக இருந்தது. சில தினங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தின் மூன்று பெரிய கிரிக்கெட் போட்டிகளையும் பார்த்த ரசிகர்களுக்கு நேற்றைய கிரிக்கெட் ஆட்டம் சிறிது விறுவிறுப்பை அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான இக் கிரிக்கெட் போட்டியில், முதலில் ஆட்டத்தைத் தொடங்கிய மத்திய கல்லூரி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 154 ஒட்டங்கள் பெற்றது. இதன் பின்னர் விளையாடத் தொடங்கிய இந்துக் கல்லூரி ஆட்ட நேரம் வரை ஐந்து விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 16 ஒட்டங்கள் எடுத்தது — ஒரு அபசகுணம் என்று தான் சொல்லலாம்.

மத்திய கல்லூரி: ஏ. தயானந்தன் 04; எஸ். பாஸ்கரன்-06, டபிள்யு. வின்ஸ்ரன்-04, ஆர். சச்சிதானந்தம்-54, ஏ. பற்குணராஜா-61, வை. அரசரட்னம்-09, வி. சிவபோதிநாதன்-02, எஸ். மேதர்-10, பி. நடராசா-01, எஸ். ராசதுரை-00, வி. அம்பலவானர்-01 (ஆட்டமிழக்கவில்லை). மொத்தம்: 154 ஒட்டங்கள்.

யாழ். இந்துக் கல்லூரி: வி. அருளானந்தம்-00, டபிள்யு. கணநாதன்-06, எஸ். நந்தகுமார்-01, எஸ். சிவானந்தன்-01, என். பாலகிருஷ்ணன்-06, மொத்தம்: 16 ஒட்டங்கள்.

யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த வி. அம்பலவாணர் 10 ஒட்டங்கள் கொடுத்து 3 விக்கட்டுகளை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

மத்திய கல்லூரியைச் சேர்ந்த சச்சிதானந்தம்: பற்குணராசாவின் ஆட்டம் மேற்று போற்றக்கூடியதாக விருந்தது.

கிரிக்கெட் போட்டி, சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்குத் தொடர்ந்து நடைபெறும்

'வெளிநாட்டு பண உதவி தேவையில்லை'

ஜகார்த்தா, மார்ச் 26

இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோ பேசுகையில்; இந்தோனேஷியாவுக்கு வெளிநாட்டு பண உதவி தேவையில்லையென்றும் அதைப் பெறுமலே இந்தோனேஷியா தன்னை நோக்கும் எதிர்ப்புக்களை சமாளிக்கு மென்றும் கூறினர்.

சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பொது ஜனசேவைச் சங்கச் சமயப் பிரசார சபையினரால் நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவில் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் இன்று மாலை 6-45 முதல் இரவு 8 மணிவரை திரு. சி. தம்பிஐயா 'திருவிளையாட்டு' என்னும் பொருள்பற்றியும், நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் காலை 8-45 முதல் 9-45 மணிவரை பிரம்மஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள் 'சமயம்' என்னும் பொருள்பற்றியும், நல்லூர் கிழக்கு முத்த விநாயகர் ஆலயத்தில் திரு. ச. சதாசிவம் 'பெரியபுராண வரலாறு' என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

இந்தியாவுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள் குறித்து இந்திய மக்கள் ஆத்திரம் கொள்வதைத் தவிர்த்து ஒற்றுமையுடனும் அமைதியுடனும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

"சிறுபான்மையினர் பிரச்னை குறித்து அதிபர் அயூப்கானுக்கு எழுதிய கடிதத்துக்கு அவர் பதிலனுப்பியுள்ளார். இந்தியா தெரிவித்திருந்த யோசனையை அவர் முற்றாக ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் இந்தப் பேச்சுக்களுக்கான அடிப்படைக் கொள்கைகள் எதுவும் வகுக்கப்படவில்லை. இருநாட்டு உள்துறை மந்திரிகளும் புதுடில்லியில் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவார்கள்" என்றும் பிரதமர் நேரு தமது வானொலி உரையில் குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சுக்கள் நல்ல பலனைக்கொடுக்குமென்றே நாம் எதிர்பார்க்கின்றோம். பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் பிரதமர் நேரு குறிப்பிட்டார்.

பத்திரிகைகளின் பொறுப்புப் பற்றி அவர் குறிப்பிடுகையில்; எதை, எப்பொழுது, எப்படி எழுதவேண்டுமென்பதை பத்திரிகைகள் நன்கு உணர்ந்திருக்க வேண்டுமென்றும் நாட்டு மக்களின் இனத்துவேஷத்தைக் கிளப்பக்கூடிய எந்தச் செய்தியையும் பெரிதுபடுத்தி பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாதென்றும் கூறினர்.

தனது உரையின் இறுதியில் இந்திய மக்களுக்குவிடுத்த வேண்டுகோளில்; இனமத பேதங்களைத் தவிர்த்து ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ மக்கள் பழகிக்கொள்ள வேண்டுமென்று பிரதமர் நேரு கேட்டுக்கொண்டார்.

பிரஜாவுரிமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஸெக்லண்ட்' தோட்டப் பாடசாலையை அரசினர் மூடியபின்னர் அத்தோட்ட மாணவர்கள் சூரியகாப்பத்தனை அரசாங்க சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலையில் சேர்ந்து படிப்பதற்கும் அனுமதி மறுத்துள்ளனர். இப்பாடசாலையில் இடநெருக்கடியைத் தவிர்க்குமுகமாகப் புதிய கட்டிடத்தைக் கட்டி உதவவும் பெரூர் ஆசிரியர் சங்கம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது. எனினும் வித்தியா பகுதியினர் மௌனம் சாதிக்கின்றனர்.

வடபகுதி அசைஸ் விசாரணை

"குத்திவிட்டு மயானத்துக்கு தூக்கிச் சென்றார்கள்"

ஊறணி கொலை முயற்சி வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நள்ளிரவு ஒரு மணியளவில் நான்கு எதிரிகளும் தன்னை நன்றாக அடித்துவிட்டு சாகும் நிலையிலிருந்த மயானத்திற்கு உயிருடன் தூக்கிச் சென்றார்கள் என்றும், 'பொலிஸ் ஜீப்' வருவதையறிந்து, தன்னை தனிய மயானத்தில் விட்டுவிட்டு எதிரிகள் ஓட்டம் பிடித்தார்களென்றும், நேற்றுக்காலை அசைஸ் நீதிமன்றத்தில் நடந்த "ஊரணி கொலை முயற்சி வழக்கில், காயமடைந்தவராகிய நாராயணபிள்ளை வைரமுத்து சாட்சியமளிக்கும் போது கூறினர்.

நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. சி. முன்னிலையில் நேற்றுக்காலை 'ஊரணி கொலைமுயற்சி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், காங்கேசன்துறைப் பகுதியைச் சேர்ந்த ஊரணியில் 62-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் திகதி, வி. நடராசா, வி. செல்லையா, எஸ். செல்லத்துரை, எஸ். கணபதிப்பிள்ளை ஆகிய நால்வரும், நாராயணபிள்ளை வைரமுத்து என்பவரை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நான்கு எதிரிகள் சார்பிலும் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. நி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டி- சில்வா வழக்கை நடத்தினர்.

எதிரிகளின் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

மேல் விசாரணை திங்கட்கிழமை காலை 9-15 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

யுதாண்ட்

நியுயோர்க், மார்ச் 26

ஜெனிவா சென்றிருந்த ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் நியுயோர்க் திரும்பினர்.

இன்று

வண்ணை வைத்தீஸ்வரகோவில் தீர்த்தோற்சவம்.

ஸ்ரீ இராமாயண பட்டாபிஷேக விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீ இராமாயண பட்டாபிஷேகவிழா இன்று காலை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் கொண்டாடப்படும். காலை 10 மணிக்கு ஸ்ரீராம பஜனையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் பிற்பகல் 9மணிக்கு ஸ்ரீ தியாக சத்திய ஜீவன சன்மார்க்க கோஷ்டியினர், நல்லூர் பஜனை சபையினர், நல்லூர் திவ்யஜீவன சபையினர் ஆகியோரின் பஜனை நடைபெறும்.

மாலை 6 மணிக்கு ஸ்ரீராம சீதாபட்டாபிஷேக வைபவம் நடைபெறும். வித்துவான் இ. திருநாவுக்கரசு. ஸ்ரீ ச. நாராயணசுவாமி, வே. த. மயில்வாகனம் ஆகியோர் உபந்நியாசங்கள் செய்வார்கள்.

டிகால் இந்தியா வருகிறார்

பாரிஸ், மார்ச் 26

பிரெஞ்சு ஜனாதிபதி டிகால், அடுத்தவருடம் இந்தியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தோனேஷியா, இந்தோசீன நாடுகள், லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ரஷ்யா, போலந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்வது பற்றி ஆலோசனை நடத்திவருவதாய் அறிவிக்கப்படுகிறது.

எல்லையில் மீண்டும் சண்டை

அடிஸ்அபாலா, மார்ச் 26

சோமாலிய - எதியோப்பிய எல்லையில் இருநாட்டுத் துருப்புகளுக்குமிடையே கடுமையான சண்டை ஏற்பட்டுள்ளது. இருதரப்பிலும் பல உயிர்ச்சேதமேற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய கடன்

புதுடில்லி, மார்ச் 26

ஜவுளி யந்திரங்கள் வாங்குவதற்கு எட்டரைக் கோடி ரூபா இந்தியாவுக்குக் கடன் அளிக்க ஜப்பான் முன்வந்திருக்கிறது.